**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கமுதி.**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**குற்றவியல் நடுவர். கமுதி**

**2026 ம் வருடம் மார்ச் திங்கள் 16 ம் நாள் திங்கள்க்கிழமை**

குற்றவியல் பல்வகை மனு எண். 95/2026

சி.பி. எண். 419/2022

திரிசங்கு (38/24),
த/பெ. தனுஸ்கோடி,
1/315–1 இந்திரா காலனி,
கமுதக்குடி, பரமக்குடி தாலுகா,
இராமநாதபுரம் மாவட்டம். ... மனுதார் /3 ம் எதிரி
வாகனத்தின் உரிமையாளர்

/ இடையே/

தமிழக அரசுக்காக
சார்பு ஆய்வாளர் ,
அபிராமம் காவல் நிலையம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
குற்ற எண். 285/2021
U/s. 379 IPC
C.C.No. 347/2025 ... குற்ற முறையீட்டாளர்

இம்மனுவின் மீதான இறுதி விசாரணை 16.03.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது மனுதாரர்/3 ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர். திரு. பவுன்ராஜ் அவர்களும், அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை – I திருமதி. N. கார்த்திகா பிரிதர்ஷினி அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதின் பேரில் இரு தரப்பு வாதங்களையும் உரிய கவனத்துடன் கேட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று **(16.03.2026)** இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

1. இம்மனுவானது 503 & 497 BNSS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வழக்கு சொத்தான TN 28 AP 9675 என்ற எண் கொண்ட JCB வாகனத்தை இடைக்கால பொறுப்பில் தரக் கோரி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.16 10:18:59 +0530

2. மனுதாரர் / 3ம் எதிரியின் மீது கடந்த 05.07.2021ம் தேதியன்று குற்ற எண். 285/2021, U/s. 379 IPC and 21(1) MMDR Actன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கில் மனுதாரர்/3ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள TN 28 AP 9675 என்ற எண் கொண்ட JCB வாகனம் மனுதாரர்/3ம் எதிரிக்கு சொந்தமானது என்றும், வழக்குச் சொத்தானது குற்றச் சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறி குற்றமுறையிடுவோரால் கைப்பற்றப்பட்டு காவல் நிலைய பாதுகாப்பில் இருப்பதாகவும், மேற்படி வாகனம் குடும்பத்தின் விவசாயப்பணிகள் மற்றும் சிவில் வேலைகளுக்கு மிகவும் அவசியம் என்பதாலும், மேற்படி வாகனம் நேரடியாக திறந்த வெளியில் வெயில் மற்றும் மழையில் நீண்ட நாட்கள் பயன்படுத்தபடாமல் இருந்தால் காலப்போக்கில் அதன் மறுமதிப்பு குறைந்து பயன்படுத்த முடியாத நிலைக்கு சென்றுவிடும் என்பதாலும், மேற்படி வாகனத்தை மனுதாரர்/3ம் எதிரியிடம் கொடுக்கும் பட்சத்தில் வாகனத்தை விற்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ மாட்டார் என்றும், மேற்படி வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும், போதுமான பிணையம் அளிக்கவும் தயாராக உள்ளார் என்றும், Hon'ble Apex court in Sundarbai Amblal Desai Vs State of Gujarat 2003 (1) CTC (175) and Our Hon'ble High Court Madurai Bench in Gajendran Vs State Inspector Civil Supply CID, Madurai 2009 (1) MLJ 852 என்ற உத்தரவின் படி மேற்படி TN 28 AP 9675 என்ற எண் கொண்ட JCB வாகனத்தை மனுதாரர்/ 3ம் எதிரியின் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்குமாறு மனுதாரர் / 3ம் எதிரி வழக்கறிஞர் வாதிட்டார்.

3. காவல் துறையினர் பதில் மனுவில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 28 AP 9675 என்ற எண் கொண்ட JCB வாகனத்தை கடந்த 24.05.2021ம் தேதியன்று குற்றமுறையீடுவோரால் கைப்பற்றப்பட்டு 17.05.2022ம் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைத்து C.P.No.419/2022 நீதிமன்ற பாதுகாப்பில் இருந்து வருவதாலும், மேற்படி வாகனத்தை மனுதாரர் 3ம் எதிரியிடம் ஒப்படைத்தால் மேற்படி வாகனத்தை விற்பனை செய்வதற்கோ, நிறம் மாற்றம் செய்வதற்கோ அதிக வாய்ப்புள்ளது என்பதாலும், வழக்கு விசாரணையின் போது வாகனத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் தாமதப்படுத்தக்கூடும் என்பதாலும், மீண்டும் இது போன்ற மணல் திருட்டு வழக்கில் ஈடுபட வாய்ப்புள்ளதாலும், மேற்படி வாகனத்தின்

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.16 10:19:12 +0530

உரிமையாளரான எதிரி திரிசங்கு மேற்படி வாகனத்தை ஒப்படைக்க வேண்டி மாண்புமிகு இராமநாதபுரம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் Cr.M.P.No.3280/2021 ன்படி மனு தாக்கல் செய்ததின் அடிப்படையில் மாண்புமிகு இராமநாதபுரம் முதன்மை நீதிபதி அவர்களால் பணம் ரூ.2,00,000/−லட்சத்திற்கு இருநபர் ஜாமீன்தாரர்கள் பத்திரமும் மற்றும் இராமநாதபுரம் சட்ட சேவைகள் ஆணையத்திற்கு சுற்றுசூழல் நிதியாக பணம் ரூ.2,50,000/−லட்சத்தை செலுத்தவும் மற்றும் சில நிபந்தனைகள் விதித்து வாகனத்தை விடுவிக்க உத்தரவு பிறப்பித்துள்ளதாலும், எதிரி திரிசங்கு மேற்படி நீதிமன்ற உத்தரவு பிரகாரம் இராமநாதபுரம் சட்ட சேவைகள் ஆணையத்திற்கு சுற்றுச்சூழல் நிதியாக பணம் ரூ.2,50,000/−லட்சத்தை செலுத்துவதற்கு பதிலாக பணம் ரூ.25000/−செலுத்த தயாராக உள்ளதாகவும் அதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை நீதிமன்றத்தில் CRL.RC (MD) No. 619/2023 மனு தாக்கல் செய்ததின் அடிப்படையில் மேற்படி மாண்புமிகு நீதிமன்றம் மேற்படி எதிரியின் கோரிக்கை ஏற்றுக்கொண்டும், மேலும் மேற்படி எதிரி TN 28 AP 9675 என்ற எண்ணுள்ள JCB வாகனத்தினை பறிமுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்ததின் அடிப்படையில் வாகனத்தை பறிமுதல் செய்ய வேண்டி பிராமாண பத்திரம் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருவதாலும், மேற்படி வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க கடும் ஆட்சேபணை தெரிவித்துள்ளனர். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

4. வழக்காவணங்களைப் பரிசீலிக்கையில் மனுதாரர் மேற்படி வழக்குச்சொத்தை கோரி ஏற்கனவே மாண்பமை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அம்மனுவானது நிபந்தனைகளின் பேரில் அனுமதிக்கப்பட்டு இராமநாதபுரம் மாண்பமை மாவட்ட சட்ட பணிகள் ஆணையத்தில் ரூ.2,50,000/−த்தை உத்தரவு நகல் கிடைக்கப்பெற்ற இரண்டு வார காலத்திற்குள் செலுத்த வேண்டும் என மாண்பமை அமர்வு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த உத்தரவிற்கு எதிராக மனுதாரர் மாண்பமை உயர்நீதிமன்றத்தினை அணுகி மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.16 10:19:35 +0530

மனுவில் உத்தரவு நகல் கிடைக்கப்பெற்ற இரண்டு வார காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் ரூ.2,50,000/–த்திற்கான பிணைப்பத்திரமும் ரூ.25,000/– தொகையை செலுத்த (Deposit) வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது என இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. ஆனால் மனுதாரர் மேற்படி நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருவதால் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 16ம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.16 10:19:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.